Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 தை 28 ஞாயிற்றுக்கிழமை (11.02.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 78

# யாழ். நிலைமையைக் கண்டறிவதற்கு ஐ.நா. உயர்குழு நேற்றுத் திடீர் விஜயம்

## செயலாளர் நாயகத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பர்

யாழ்ப்பாணம்,பெப்ரவரி11

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போதைய நிலைமை-மக்களின் அவலங்களை - கண்டறியும் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபையின் உயர்மட்டக் குழு ஒன்று, நேற்று திடீர் விஜயம் செய்தது.

ஐ.நா செயலாளர் நாயகம் பான்-கி-மூன் விடுத்த பணிப்பின் பேரில், தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த உதவிச் செயலாளர் நாயகம் அஞ்சலா கான் தலைமையிலான ஐவர் குழு நேற்று இங்கு வந்தது.

குடாநாட்டில் இயங்கும் ஐ.நாவின் உப நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து குடாநாட்டின் நிலைமைகள் குறித்து குழுவினர் விரிவாகக் கேட்டறிந்தனர்.

நேற்றைய ராஜீக விஜயத்தில் ஐ.நாவின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி பிறட்ரிக் லயன், ஐ.நா.தலைமையக அதிகாரிகள் அலன் அரோடி, வலன்ரைன் ஹாற்சின்ஸி, ஐ.நா இலங்கை அலுவலகத்தைச் சேர்ந்த றொறி மொங்கோவா ஆகியோரும் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

அவர்களுடன் இலங்கை வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த எஸ்.பி.டபிள்யு பத்திரான, சமாதான செயலகத்தைச் சேர்ந்த ஷிராணி குணதிலகா ஆகியோரும் கூட வந்தனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் உயர் மட்டக் குழுவினர், குடாநாட்டின் உணவு நிலைமை, மனித உரிமை மீறல்கள், மக்களின் சுதந்திரமான நடமாட்டம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை மற்றும் அவர்களின் அவலங்கள், வாழ்க்கை நிலைப் பாதிப்புகள் குறித்த விவரங்களை கேட்டறிந்து கொண்டனர்.

குடாநாட்டு மக்களுக்கு சகல துறைகளிலும் ஏற்பட்டுள்ள பாதிப்புக் களையும் இடர்களையும் மிக விரிவாகக் கேட்டறிவதில் ஐ.நா. தூதுக்குழுவினர் மிகுந்த அக்கறை காட்டியதாக அறியவந் தது.

தாம் சந்தித்த தரப்பினரிடம் இருந்து விரிவான அறிக்கைகளையும் புள்ளிவிவரங்களையும் அவர்கள் பெற்றுக்கொண்டதாகவும் தெரிகிறது.

ஐ.நாவின் உயர்மட்டக்குழுவினர் யாழ். அரச அதிபர் கே.கணேஷ், யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள்

(04ஆம் பக்கம் பார்க்க)

## கடந்த வருடத்தில் மொத்தம் 584 பேர் குடாநாட்டில் காணாமற்போனதாகப் பதிவு

### 416 பேர் குறித்த தகவல் எதுவும் இதுவரை இல்லை

யாழ்ப்பாணம், பெப்.11

குடாநாட்டில் கடந்த வருடத்தில் மொத்தம் 584 பேரைக்காணவில்லை என்று முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டதாக மனித உரிமை ஆணைக்குழுவின் வட்டாரங் களில் இருந்து தெரியவந்துள்ளது.

கடந்த வருடத்தில் காணாமற்போனோர் குறித்துத் தமக்குக் கிடைத்த புள்ளிவிவரங்களை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகம் தயாரித்துள்ளது. அந்தப் புள்ளிவிவரங்களில் இருந்தே மேற்படி தகவல் தெரியவந்துள்ளது.

பிரஸ்தாப புள்ளிவிவரங்களின் பிரகாரம் 2006ஆம் ஆண்டின் பன்னிரண்டு மாதங்களிலும் காணாமற்போன 584 பேரில் 416 பேர் தொடர்பான தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

காணாமற்போனவர்களில் 128பேர் தொடர்பான முறைப்பாடுகளில் படையினர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதாகவும் -

29பேர் கடத்தப்பட்டனர் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் - புள்ளி விவரம் தெரிவிக்கின்றது.

இதுவரை கிடைத்த முறைப்பாடுகளில் இருந்து 158பேர் தொடர்பான தகவல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ளன என்று

(04ஆம் பக்கம் பார்க்க)

## இன்றும் ஊரடங்கு மாலை 6 மணிமுதல்

யாழ்ப்பாணம்,பெப்.11

குடாநாட்டில் ஊரடங்குச்சட்டம் இன்றும் மாலை 6முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று யாழ்.பாதுகாப்புத் தலைமையகம் நேற்றிரவு தெரிவித்தது.

இன்று அதிகாலை 4மணிக்கு நீக்கப்படும் ஊரடங்கு மாலை 6மணிக்கு மீண்டும் நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டது. (1-4)

## வன்னியில் புலிகளின் பகுதி நோக்கி ஷெல் தாக்குதல்!

கிளிநொச்சி,பெப்.11

மணலாறில் இருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வன்னிப் பிரதேசத்தில் உள்ள ஊஞ்சல் கட்டு, மருதோடை ஆகிய பகுதிகளை நோக்கி நேற்று ஷெல்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலை அடுத்து அந்தப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (1)

## மாத்தளையில் கறுப்புக்கொடி

கொழும்பு,பெப்.11

அமைச்சர் பதவியில் இருந்து மங்கள சமரவீர நீக்கப்பட்டதைக் கண்டித்து மாத்தளை நகரில்நேற்றுக் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

மங்கள சமரவீர வெளிநாட்டில் இருப்பதாகவும் -

அவர் ஓரிரு தினங்களில் நாடு திரும்புவார் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (1)

## ஜனாதிபதி மகிந்தா மாலைதீவு விஜயம்

கொழும்பு, பெப்.11

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 3 நாள்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று மாலைதீவுக்குப் பயணமானார்.

இலங்கைக்கும் - மாலைதீவுக்கும் இடையில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பிலும் கூட்டுறவை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் ஜனாதிபதி அங்கு இருதரப்புப் பேச்சு நடத்துவார் என வெளிவிவகார அமைச்சு நேற்று தகவல் வெளியிட்டுள்ளது.

கல்வி மற்றும் கலாசாரத்துறைகளில் இருதரப்பு உறவைப் பலப்படுத்தும் ஒப்பந்தங்களில் இரு நாடுகளும் கைச்சாத்திடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (12)

## எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கைப்பற்ற ஜே.வி.பி. தீவிரம்

### புதிய அரசியல் முன்னணியை அமைக்க ஐ.தே.க. முயற்சி

கொழும்பு, பெப்.11

அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட மங்கள சமரவீர, அனுரா பண்டாரநாயக்கா, ஸ்ரீபதி சூரியாராட்சி ஆகியோர் உட்பட ஏழு அரச எம்.பிக்களின் ஆதரவுடன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கைப்பற்றுவதற்கு ஜே.வி.பி. தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ.தே.கட்சியில் இருந்து அதிருப்திக் குழுவினர் அரசுடன் இணைந்ததையடுத்து அக்கட்சியின் நாடாளுமன்ற பலம் 45 ஆகியுள்ளது.

நாடாளுமன்றத்தில் 38 ஆசனங்களைக் கொண்டிருக்கும் ஜே.வி.பி., அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்ட மூவர் உட்பட ஐ.தே.கட்சி அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து ஏழு உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்று எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கோர வாய்ப்பு இருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

ஜே.வி.பி. எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்கும் பட்சத்தில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு பெரும் நெருக்கடி ஏற்படும் என்றும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (04ஆம் பக்கம் பார்க்க)

## நால்வர் கடத்தப்பட்டதாக நேற்று ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.11

குடாநாட்டில் நால்வரை இனந்தெரியாத ஆயுததாரிகள் கடத்திச் சென்றதாக மனித உரிமை ஆணைக்குழு யாழ்.அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சங்கானையைச் சேர்ந்த ஜோசப் தேவகரன் (வயது-32) என்பவர் நேற்றுக் காலை 9 மணியளவில் சங்கானைச் சந்திப் பகுதியில் வைத்து வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டார் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரியாலையைச் சேர்ந்த செல்லையா நிக்ஷன் (வயது-29) என்பவர் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் அவரது வீட்டில் வைத்துக் கடத்தப்பட்டுள்ளார்.

இராமநாதன் வீதி, நாயன்மார்கட்டைச் சேர்ந்த யோ.கபிலன் (வயது-22) என்பவர் நேற்றுமுன்தினம் இரவு 12.15 மணியளவில் அவரது வீட்டில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்டார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த அரியநேசன் விஜயகுமார் (வயது-29) என்பவர் மல்லாகத்தில் உள்ள அவரது மாமியார் வீட்டில் வைத்து நேற்றுமுன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் கடத்தப்பட்டார் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை - சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த ச.ரமணகுமார் (வயது-26) என்பவர் நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு கடைக்குச் சென்றதாகவும் அதன் பின் காணாமற்போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கரவெட்டியைச் சேர்ந்த இளைஞர் ஒரு வர் கொலை அச்சுறுத்தல் காரணமாக மனித உரிமை ஆணைக்குழுவில்

(04ஆம் பக்கம் பார்க்க)

## அரசைப் பலவீனப்படுத்துவோருக்கு புலிகள் உதவுவதாகக் குற்றச்சாட்டு

### சுதந்திரக்கட்சிச் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.11

அரசைப் பலவீனப்படுத்துவோரின் பின்னணியில் விடுதலைப் புலிகளே உள்ளனர் என சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயக்குழுக் கூட்டத்தின் பின் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது-

அரசாங்கத்தைப் பலவீனப்படுத்த முயற்சிப் போரின் பின்னணியில் விடுதலைப் புலிகளே உள்ளனர்.

பலவீனப்படுத்த முயற்சிப்போரின் நடவடிக்கைளின் பின்னணியில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ விடுதலைப் புலிகள் உள்ளனர் என்று தெளிவாகத் தெரியவருகிறது. புலிகளின் தேவைகளை அவர்கள்நிறைவேற்றிவருகின்றனர். ஆகையால் மஹிந்த ராஜபக்ஷவின் அரசைப் பலவீனப்படுத்த நாம் இடமளிக்கமாட்டோம்.

இந்த அரசை நாம் பலப்படுத்துவோம் - என்றார் அவர்.

இதேவேளை - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் களான அனுரா பண்டாரநாயக்கா, மங்கள சமரவீர, ஸ்ரீபதி சூரியாராய்ச்சி ஆகியோரை பதவியில் இருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எடுத்த தீர்மா னத்தை கட்சியின் செயற்குழு அங்கீகரித் துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நேற்றுமாலை அலரி மாளிகையில் இடம்பெற்றது.

சுமார் ஒன்றரை மணிநேரம் இடம் பெற்ற இக்கூட்டத்தில் பதவி நீக்கப்பட்ட அமைச்சர்கள்மூவரும் கட்சியின் விதிகளை

(04ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு திருமண பூர்த்தி தின வாழ்த்து



கனடாவில் வசிக்கும்
**றஞ்சன் - புஸ்பகலா**
தம்பதியரின் திருமண ஓராண்டு பூர்த்தி தின நாள் இன்று (11.02.2007) ஞாயிற்றுக்கிழமை. இப் பொன்னான நாளில் எங்கள் அன்புச் செல்வங்கள் நாகபூஷணியின் நல் அருளைப் பெற்று இல்லம் என்ற கோயிலிலே அணையாத தீபங்களாய் நல்லன பெற்று நலமுடன் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தும் அன்பு உள்ளங்களான அப்பா, அம்மா, அத்தான்மார், அண் ணன், அக்காமார், தம்பிமார், தங்கைகள்.

நி.முகவரி: மண்டைதீவு 08.
த.முகவரி: திருநெல்வேலி. [57925]
நா.சிவகுருநாதன் குடும்பம்

## இடமாற்றம்

95, ஸ்ரான்லி வீதியில் அமைந்திருந்த எமது ஸ்தாபனம் தற்போது 1C, ஸ்ரான்லி வீதியில் இயங்குகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

றேடியோ, T.V., வீட்டுப்பாவனைப் பொருள்களைச் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள நாடவேண்டிய இடம்

**V.K. இராசரத்தினம்**
1C, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [57839]

## 6ஆம் ஆண்டு நினைவுநாள்

மலர்வு 1952 - 03 - 04



உதிர்வு 2001 - 02 - 11

### அமரர் வைத்திலிங்கம் துரைசிங்கம்

ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்தாலும்
இன்றுபோல் உள்ளதையா
உங்கள் உறவு - யுகம் கோடி
ஆனாலும் மாறாது உங்கள் நினைவு

5ஆம் ஒழுங்கை,
நல்லூர். [57835]
குடும்பத்தினர்.

## 37ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

மலர்வு 26 - 12 - 1939



உதிர்வு 06 - 01 - 2007

### அமரர் அம்பலவாணர் அருள்நேசவாசன்

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அனுதாபச் செய்திகள் தெரிவித்தோருக்கும் மற்றும் சகல வழிகளில் உதவியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (11.02.2007) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

பூதர் வளவு, அச்செழு. [57914]
குடும்பத்தினர்.

## நீங்காத நினைவலைகள்

### நான்காம் மாதம்



அமரர்
**சூசைப்பிள்ளை அல்போன்சஸ்**

தோற்றம் 05.09.1925 | மறைவு 18.11.2006

மாதங்கள் நான்கு மறைந்தாலும்
உங்கள் பாதங்கள் பட்ட இல்லம்
இன்னும் எம்மனதை விட்டகலா
வேதனையை சேர்க்குதையா
பல் ஆண்டுகள் சென்றாலும் ஐயா
உம் நினைவு எம் மனதை விட்டகலா!

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.
தொ.பே. 0602213116

### எட்டாம் ஆண்டு



திருமதி
**மரியா கேமின் சுலோசனா யோசப்**

தோற்றம் 24.03.1954 | மறைவு 11.02.1999

ஆண்டுகள் எட்டு ஓடிமறைந்தாலும்
மீண்டும் எம்மிடம் வந்திடுவீர் என
உம் நினைவால் வாடும் எமை
தெய்வ லோகத்திலிருந்து ஆசீர்வதிப்பீராக
என்றென்றும் உம் நினைவால்
ஏங்கி நிற்கும்,
கணவர், பிள்ளைகள், பெற்றோர், சகோதரர்கள், உற்றார், உறவினர்.

கி.ச.அல்போன்சஸ் (றோகான்)
போந்தி ஒழுங்கை, பண்டத்தரிப்பு. [57824]

## கிருஷ்ணா திருமண சேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த
1974 (MBBS) டாக்டர்
1976 (MBBS) டாக்டர்
1977 சிவில் எஞ்ஜினியர்
1976 விரிவுரையாளர்
1976 (B.Sc) மாஸ்ரர்
இவர்களுக்கு அழகிய பெண்கள் தேவை.
T. சுப்பையா,
செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு.
தொ.பே. 222 9032. [57838]

## மணமகன் தேவை

இந்து, கௌரவ குடும்ப அரச உத்தியோகம் பார்க்கும் 30 வயது, ரேவதி, கிரகபாவம் 40, செவ்வாய் இல்லை, உயர்ந்த, வெள்ளை மெல்லிய தோற்றமுள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர்.
விளம்பர இல. 2950,
மே/ பா உதயன். [57904]

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

40 நாள் நிரம்பிய நல்லின அல்ஷேசன் நாய்க் குட்டிகள் (பூச்சி நீக்கியது) விற்பனைக்கு உண்டு.
இ. தயாநிதி, பிடாரி அம்மன் கோயிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். [57846]

## தவறிவிட்டது

வாகீஸ்வரி வீதி, கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த வயித்தி தருமர் என்பவருடைய தேசிய அ.அட்டை, விசேட அ. அட்டை, உத்தியோக அ. அட்டை என்பன தவறிவிட்டன. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்கூறிய விலாசத்தில் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும். [57902]

## விற்பனைக்கு

அச்செழு வடக்கு, நீர்வேலியில் 8 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
தொ.பே. 0777 202275. [57810]

## தினசரி விமானசேவை

கொழும்பு -யாழ்.
யாழ். -கொழும்பு
DAYA AVIATION நிறுவனத்தினால் நான்கு பேர் பயணிக்கக்கூடிய இரு வழிப்பாதை தினசரி சிறுவிமான சேவை உத்தரவாதத்துடன் நடத்தப்படுகின்றது.
ஒரு வழிப்பாதைக்கான கட்டணம் ரூபா 30,000/=
உடனடிப்பயணத்துக்கு தொடர்பு கொள்ளவும்.
தொ.பே.: 0114969116/ 0114542190
பக்ஸ்: 0114542360
மொபைல்: 0773846681

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

வெண்ணிற பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: தொ.பே. 0775991943
368/4, பிரதான வீதி, வஸ்தியான் சந்தி,
யாழ்ப்பாணம். [57919]

## விற்பனைக்கு

சொந்தப் பாவனையிலுள்ள CR41 மொடல் (டீசல்) வான் விற்பனைக்குண்டு.
உதய கதிரவன் நகைமாடம்,
188, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 8043, 077 9006828. [57924]

## உடன் விற்பனைக்கு

ஒருவருடம் பாவித்த பிளாஸ்ரிக் கதிரைகள் மொத்தமாக 150, மருன்கலர் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 9225603. [57928]

## கார் விற்பனைக்கு

டாக்டர் ஒருவரின் தனிப்பட்ட பாவனையில் உள்ள புதிய Maruti Zuziki - Wagan - R கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 'இராஜஸ்தான்'
சிவராஜா அவென்யூ, பலாலி வீதி,
தபால் பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.
(Music World முன்பாக). [57923]

## விற்பனைக்கு

வீட்டு மின் இணைப்புப் பொருள்கள், மின்னியல் பொருள்கள், நீர் இணைப்புப் பொருள்கள், காசாளர் மேசைகள், கண்ணாடி அலுமாரிகள், இரும்பு இறாக்கைகள் குளிரூட்டிகள் மற்றும் பெயர் பலகையும் விற்பனைக்கு உண்டு.
S.J. எம்போறியம்
360/7, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 5150623. [57826]

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள YAMAHA (PSR -640) KEYBOARD, P4 Computer என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு:
தொ.பே. 0713055778.

## வீடு விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் 1½ பரப்புக் காணியில் சகல வசதிகளுடனும் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:
தொ.பே.
0773104069.

# சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு அடுத்த வாரம் கூடவுள்ளது

கொழும்பு, பெப்.11

நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென அமைக்கப்பட்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு, அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு தாம் முன்வைத்த யோசனைகளுக்கு அரசியல் கட்சிகளிடமிருந்து கருத்துகள் கிடைத்துள்ளதாக குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளின் கருத்துகளை கவனத்திற் கொண்டு, தாம் முன்வைத்த யோசனைகளில் திருத்தங்களைச் செய்து, அதனை மீண்டும் அக்கட்சிகளிடம் முன்வைக்கவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

அடுத்த வாரம் நடைபெறவுள்ள சர்வகட்சிகளின் பிரதிநிதிகள் குழுவின் கூட்டத்தில் அரசியல் தீர்வு யோசனைகள் குறித்து வெளிப்படையாக விவாதிக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுக் கூட்டங்களில் தாம் கலந்து கொள்ளப் போவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

## ஊரடங்கை மீறியவருக்கு விளக்கமறியல்

ஊரடங்குச் சட்டத்தை மீறியதாக இளவாலையில் கைது செய்யப்பட்ட ஒருவர் மல்லாகம் நீதிவானால் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு ஊரடங்கு நேரத்தில் நடமாடினார் எனத் தெரிவித்து ஒருவரை இளவாலைப் பொலீஸார் மல்லாகம் நீதிவான் திருமதி.ச.இளங்கோவன் முன் நேற்று ஆஜர் செய்தனர். அவரை 14நாள் விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## தவறிவிட்டது

தே. அமலநாயகம் (வேவி) என்பவருடைய சாரதி அனுமதிப் பத்திரம் A 9855133 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் டச்சு வீதி, உடுவில், சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

## இந்தியாவில் கல்வி கற்கும் வாய்ப்பு
### பிருந்தாவன் கல்லூரி

பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது

கல்வி நெறிகள்: B.Sc. B.B.M. B.C.A. B.Com.

அடிப்படைத் தகைமை க.பொ.த (உயர்தரம்) 2ம் வகுப்பில் சித்தி
பதிவுகள் தற்போது மேற் கொள்ளப்படுகின்றன

**Company Secretarial Services(Pvt.)Ltd.**
285C-1/1 Stanley Tillakaratne Mawatha, Nugegoda.
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்
தொலைபேசி இலக்கம் - 0777 317043

## தேவை

பழைய சோதனைப் பேப்பர், கொப்பி, புத்தகம் தேவை.
தொடர்பு:
**அன்னா தொழிலகம்,**
இணுவில்.

## உடன் விற்பனைக்கு

Passion Plus மோட்டர் சைக்கிள் (MP MD xxxx) ஆண், பெண் சைக்கிள்கள், கட்டில், இரும்பு அலுமாரி, Computer Scanner என்பன உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 222 2929
077 6158090.
(57936)

## மணிவிழா வாழ்த்து



இன்று 11.02.2007 நடைபெறும் யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலய முன்னாள் அதிபர் சி.சோமேஸ்வரபிள்ளை அவர்களின் மணிவிழா நிகழ்வுகள் சிறப்புறவும் அவரது ஓய்வுக்காலம் சிறப்புற அமையவும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். [57330]
சி.ரஞ்சனதாஸ் குடும்பம்,
52, யாழ். வீதி.

## T.C.T. Beauty Centre

மணப்பெண் அலங்காரம் (Facial, Eyebrow, Threading, Waxing) Cake Icing போன்ற அழகு சேவைகளுக்கு தொடர்பு கொள்ளவும் தொ.பே. 0776917697

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தின் ஆதரவுடன் தியாகி அறக்கொடை நிறுவனம் நடத்தும் அழகுக்கலை பயிற்சி நெறி (Cake Icing, Cookery, Flower Making, Facial, Hair style, Bridal Dressing, Fabric painting) ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

பயிற்சிக் காலம் 4 மாதம்
பயிற்சி முடிவுற்றதும் சான்றிதழ் வழங்கப்படும். [57931]

தொடர்புக்கு:-
**தியாகி அறக்கொடை நிறுவனம்,**
5_, நாவலர் வீதி, நல்லூர், யாழ். தொ.பே. 0776917697

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
### Registration of Inquiring Officers

Public Officers / Retired Public Officers / Retired University Teachers who were in the rank of Senior Lecturer and above or Senior Assistant Registrar and above in any Sri Lankan University with experience in the system of General Administration / University Administration / Academic Administration and in holding inquiries are invited to register with the University as Inquiring Officers to conduct disciplinary inquires.

Those who wish to register with the University as Inquiring Officers are requested to furnish to me on or before 28.02.2007 in writing their full name, designation at present or at the time of retirement, contact details address and Telephone number and their experience in conducting inquiries.

**Registrar.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., தொ.ந.: 222 3837

## பொறுமையின் எல்லையில் சர்வதேசம்

மனித உரிமை மீறல்கள் நாட்டில் மிக மோசமாக அதிகரித்து வருகின்றமை குறித்து எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே நாடாளுமன்றத்தில் வேதனையும் விசனமும் தெரிவித்திருக்கிறார்.

*"ஆயுதங்கள் பேசும்போது சட்டமும் ஒழுங்கும் மௌனித்து விடுகின்றன. இதுதான் இன்று நாட்டின் உண்மை நிலை. இங்கு நாளாந்தம் இடம்பெறும் ஆள் கடத்தல்கள் மனிதப் படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச சமூகம் விமர்சிக்கவும் கண்டிக்கவும் தலைப்பட்டுவிட்டது. இவ்விடயம் குறித்து நாம் இனிமேலும் அசட்டை செய்யவோ, உதாசீனம் செய்யவோ முடியாது"* - என்று எச்சரித்திருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர்.

மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் இலங்கை அரசின் வண்டவாளம் தண்டவாளம் ஏறும் நிலைமையை நன்கு உணர்ந்தவர் - புரிந்தவர் - அண்மைக்காலம் வரை இலங்கை அரசின் வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீரதான். இலங்கை நிலைவரம் தொடர்பாக சர்வதேச சமூகத்தின் எரிச்சலையும் அதிருப்தியையும் அண்மைக் காலம் வரை - தாம் வெளிவிவகார அமைச்சர் பதவியைப் பறிகொடுக்கும் வரை - நேரடியாக எதிர்கொண்டவர் அவர் என்பதால், அதன் தாக்கம் புரிந்தவர் அவரே.

இப்போது அரசில் அமைச்சர் பதவியையும் இழந்து "ராஜபக்ஷ அன்ட் பிறதர்ஸ்" நிறுவனத்தினரால் அமைச்சரவையில் இருந்து எட்டி உதைத்து வெளியே தள்ளப்பட்டிருக்கின்றார் மங்கள சமரவீர. இப்படி வெளியேற்றப்படுவதற்கு முன்னர் அரசுத் தலைவரான மஹிந்த ராஜபக்ஷவை நல்வழிப்படுத்தும் - திருத்தும் - நன்நோக்குடன் தம் கைப்பட கடிதம் ஒன்றை அரசுத் தலைவருக்கு அனுப்பியிருந்தார் மங்கள.

அந்தக் கடிதத்தில் நாட்டின் மனித உரிமை மீறல் செயற்பாடுகள் மோசமாக அதிகரித்து வருவது சர்வதேச ரீதியில் நாட்டையும் அரசையும் பெரும் இக்கட்டுக்குள் ஆழ்த்தப் போகின்றது என்பதை விசனத்துடன் சுட்டிக்காட்டி எச்சரித்திருதார் மங்கள சமரவீர.

*"ஒவ்வொரு ஐந்து மணி நேரத்துக்கும் காணாமற் போகும் சம்பவம் ஒன்று நாட்டில் அரங்கேறுகின்றது. ஆள்கடத்தலும் படுகொலைகளும் நாட்டில் சாதாரண விடயங்களாவிட்டன. இவற்றை யார் செய்தாலும் அவற்றை தடுத்து நிறுத்த முடியாத இயலாத் தன்மைக்கு அரசே பொறுப்பு"* - என்பதை அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

முதிர்ந்த அரசியல்வாதியான மங்கள சமர வீர வெளிப்படையாகச் சுட்டிக்காட்டாத - அல்லது சுட்டிக் காட்ட விரும்பாத - ஓர் அம்சமும் இதில் உண்டு.

நாட்டில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் இவ்வாறு மோசமான கட்டத்தை அடைந்தமைக்கு அரசின் இயலாத் தன்மை காரண மல்ல. அரசுத் தலைமையின் முழு ஆசீர்வாதத்தோடும், ஒத்தாசையுடனும், இணக்கத்துடனுமே இவ்வளவும் அரங்கேறுகின்றன என்பது வெள்ளிடமலை. மக்களுக்கு மட்டுமல்ல, மனித உரிமை அமைப்புகள், பொது நிறுவனங்கள் போன்றவற்றுக்கு மட்டுமல்ல, சர்வதேச சமூகத்துக்கே உள்ளங்கை நெல்லிக்கனி போல புரிந்த - தெரிந்த - விவகாரம் இது.

*"இலங்கையின் அன்றாடம் இடம்பெற்று வரும் கடத்தல்களும், மனிதப் படுகொலைகளும் இன்று சர்வதேச விவகாரங்களாகிவிட்டன. ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சர்வதேச சமூகம் நமது நாட்டில் அப்பட்டமாக இடம்பெறும் மனித உரிமை மீறல் தொடர்பாக விமர்சிக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது."* - என்று எதிர்க்கட்சித் தலை வர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் எச்சரிக்கை விடுத்தமையும் கூட இவ்விவகாரம் புரிந்தமையால்தான்.

தென்னிலங்கையை இருண்ட யுகம் மூடியிருந்த 1987 - 1991 காலப் பகுதியில் முப்பதாயிரத்துக்கும் அதிகமான மக்கள் காணாமற் போகச் செய்யப்பட்டனர். அந்த யுகம் மீண்டும் இலங்கையைச் சூழ்ந்து கவிழ்ந்து கொள்ள ஆரம்பித்து விட்டது. எண்பதுகளில் இருந்து இப்போது சற்று மாற்றம். அப்போது தெற்கில் மட்டும் அரங்கேறிய அந்த அவலம் இப்போது வடக்கு - கிழக்கு ஆகிய தமிழர் தாயகப்பிரதேசத்திலும் கொழும்பு உட்பட தென்னிலங்கையின் முக்கிய பகுதிகளிலும் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது.

தமிழரின் உரிமைக்காக விடுதலைப் போராட்டத்தை "பயங்கரவாதம்" ஆகச் சித்திரித்துக் கொண்டு, தன்னைச் சட்டரீதியான அரசு என உரிமைகோரியபடி 'அரச பயங்கரவாதத்தை'க் கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றது இந்த ஆட்சி.

ஆட்சியின் ஆசீர்வாதத்தோடும் அங்கீகாரத்தோடும் 'அரச பயங்கரவாதம்' கொடிகட்டிப் பறப்பதால் 'சட்டத்தின் ஆட்சி சீர்குலைந்த நாடாக' இலங்கையை அடையாளப்படுத்தியிருக்கின்றது ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு.

கடத்தலும் கப்பம் கோரலும், காணாமற் போதலும், படுகொலைகளும், சடலங்கள் மறைக்கப் படுதலும் சர்வ சாதாரணமாக - சட்டத்தின் தடை ஏதுமின்றி - தொடர, இந்த அராஜகங்களுக்கு 'சல்யூட்' அடித்துக் கொண்டிருக்கின்றன சீருடைகள்.

மனித உரிமைகள் குறித்தும், சட்டத்தின் ஆட்சி குறித்தும் அதிகம் பேசும் - அதிகம் கவலை கொள்ளும் - சர்வதேச சமூகம், சட்டரீதியான ஆட்சியின் பெயரால் இவ்வாறு அநீதியும் இந்த இலங்கைத் தீவில் தொடர்ந்தும் அரங்கேறுவதை வெறுமனே பார்த்துக்கொண்டு இனிமேலும் வாளாவிருக்கும் என அரசுத் தலைமை எண்ணுமானால் அது ஏமாறப் போகின்றது என்பது நிச்சயம். இலங்கை விவகாரத்தில் சர்வதேச சமூகம் பொறுமையின் எல்லையில் நிற்கின்றது என்பதே உண்மை.

# கடத்தல்கள், கொலைகளால் சர்வதேச ரீதியில் நாட்டின் பெயருக்கு களங்கம் என்கிறார் ரணில்

கொழும்பு, பெப். 11

ஆயுதங்கள் பேசும்போது சட்டமும், ஒழுங்கும் மௌனித்து விடுகின்றன. அதுதான் இன்று நமது நாட்டின் உண்மை நிலை. இங்கு நாளாந்தம் இடம்பெறும் ஆள்கடத்தல்கள், மனிதப்படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச சமூகம் விமர்சிக்கவும் கண்டிக்கவும் தலைப்பட்டுவிட்டன. இதனை நாம் அசட்டை செய்து விடக்கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வியாழனன்று நாடாளுமன்றத்தில் எச்சரிக்கை விடுத்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் நடராஜா ரவிராஜுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீது உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

சனநடமாட்டம் நிறைந்த காலை வேளையிலேயே ரவிராஜ் சுட்டுக்கொல்லப்பட்டார். கொலை நடந்த இடத்திற்கு இரண்டு பக்கங்களிலும் இரண்டு இராணுவ முகாம்கள் இருக்கின்றன. அருகில் ஒரு பொலிஸ் நிலையமும் இருக்கின்றது. இப்படியான நிலையில் கொலையாளிகள் எப்படித் தப்பிச் சென்றனர். இது புரியாத புதிராகவே இருக்கின்றது. இக்கொலைக்கு யார் பொறுப்பு?

நாட்டில் நடைபெறும் எல்லாப் படுகொலைகளுக்கும் புலிகளும், பயங்கரவாதிகளும்தான் காரணம் என்று கூறி தட்டிக்கழித்து விட முடியாது. பொறுப்புள்ள அரசு என்ற வகையில் இவற்றைத் தடுக்கவேண்டும். நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

ரவிராஜ் இந்த நாடாளுமன்றத்தில் ஓர் உயிர் நரம்புபோல் செயற்பட்டார். தமிழ், சிங்கள மக்களுக்கு இடையில் ஒரு இணைப்புப் பாலம் போன்றிருந்தார்.

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளையும், ஏற்பட்டுள்ள இன்னல்களையும், சிங்கள மக்கள் புரிந்துகொள்ளச் செய்தார். ரவிராஜ் ஒரு தமிழராக மட்டுமல்ல ஒரு இலங்கையராகவே வாழ்ந்தவர்.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பாகவும், அரச படைகள் மற்றும் ஆயுதக் குழுக்கள் என்பனவற்றால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பங்கள், பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தொடர்பாகவும் குரல் எழுப்பினார்.

இதன் காரணமாகவே அவர் பட்டப் பகலில் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

இலங்கையில் அன்றாடம் இடம்பெற்றுவரும் கடத்தல்களும், படுகொலைகளும் இன்று சர்வதேச விவகாரமாகிவிட்டது.

ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சர்வதேச சமூகம் நமது நாட்டில் அப்பட்டமாக இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விமர்சிக்கின்றன.

அடிப்படை மனித உரிமைகள் பாதுக்காக்கப்பட வேண்டும். அடிப்படை மனித உரிமைகள் தொடர்பாகப் பரிசீலனை செய்வதற்கு நாடாளுமன்றத்தில் நிரந்தரமான மனித உரிமைகள் நிலையியற்குழு ஒன்றை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார். (ஐ-1)

## உணவு விநியோகம் குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.11

குடாநாட்டில் உணவு விநியோகம் தொடர்பான கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

ப.நோ.கூ. சங்கங்களின் தலைவர், முகாமையாளர் மற்றும் பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் இக்கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இப்போது மேற்கொள்ளப்பட்டு வரும் உணவு விநியோக நடைமுறை பூர்த்தியான பின்னர் கையிருப்பில் உள்ள பொருள்களை எந்த வகைகளில் விநியோகிப்பது என்பது குறித்து கலந்துரையாடலில் ஆராயப்பட விருப்பதாக அரச அதிபர் தெரிவித் தார். (அ-1)

## மானிப்பாய், நவாலிப் பகுதிகளில் களவுபோன சைக்கிள்கள் பொலீஸாரால் மீட்பு

### சந்தேக நபர்கள் நீதிவான் முன் ஆஜர்



யாழ்ப்பாணம், பெப்.11

பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய மூவர் மானிப்பாய் பொலீஸாரால் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 14 சைக்கிள்கள் மற்றும் 5 நீர் இறைக்கும் மோட்டார் பம்பிகள் என்பன மானிப்பாய் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மானிப்பாய் மற்றும் நவாலிப் பகுதிகளில் நடந்த திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் மூவர் நேற்று மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.எம். விக்கிரமரட்ண, சப் இன்ஸ்பெக்டர் நிரஞ்சன், பொலீஸ் சுப்பிரிண்டன் சமந்த, பொலீஸ் உத்தியோகத்தர்களான ரட்ணசிறி, மலிந்த, ரிஸ்வி, முருகையா ஆகியோர் அடங்கிய பொலீஸ் குழுவினர் இவர்களைக் கைது செய்தனர்.

55995165, 55705763, 56085024, 68246090, 69274007, 57196483, 57163685, 68220879, 57163868, Y 517403 ஆகிய இலக்கங்களைக் கொண்ட பெண்களுக்கான சைக்கிள்களும் 59728394, 57119219, 11117047, 56C84689 ஆகிய இலக்கங்களைக் கொண்ட ஆண்களுக்காகன சைக்கிள்களும் 5 நீர் இறைக்கும் மோட்டார் பம்பிகளுமே கைப்பற்றப்பட்டன.

மேற்படி பொருள்களுக்கு உரித்துடையவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டிப் பொருள்களைக் பெற்றுக் கொள்ளுமாறு பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (அ-8)

## வவுனியாவில் ஆசிரியர் சுட்டுக்கொலை

வவுனியா - மன்னார் வீதி, வேப்பங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதவர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஆசிரியர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இரவு 7.45 மணியளவில் ஆசிரியரின் வீட்டிற்கு சென்ற இருவர், அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்று விட்டனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

பூந்தோட்டம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் ஆசிரியரான தம்பராசா திலீபன் (வயது 40) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

சடலம் பொலிஸாரால் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (12)

## முண்டியடிக்காமல் பொருள் கொள்வனவு

நல்லூர், பெப்.11

நகரப்பகுதியில் உள்ள கடைகளில் மக்கள் தமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை முண்டியடிக்காமல் கொள்வனவு செய்வதை நேற்றுக் காண முடிந்தது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதிக்குப் பின்னர் மக்கள் வரிசையில் நிற்காமல் பொருள்களைக் கொள்வனவு செய்தனர்.

குத்தரிசி ஒரு கிலோ 115 ரூபா தொடக்கம் 140 ரூபா வரையும் மரக்கறி எண்ணெய் லீற்றர் 270 ரூபாவுக்கும் நேற்று விற்பனை செய்யப்பட்டன.

நகரப்பகுதியில் உள்ள பல கடைகளில் அநேகமான பாவனைப் பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

அதேவேளை -

நடைபாதைக் கடைகளில் 'லக்ஸ்' சவர்க்காரம் 80 ரூபாவாகவும் 'லக்ஸ்பிறே' பால்மா 390 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டன. (1-111)

**நாளை**

தை - 29
திங்கட்கிழமை
12.02.2007
திதி: தசமி
பின்னிரவு : 03.17
நட்சத்திரம் : கேட்டை
பின்னிரவு : 03.33
சுபநேரம் : [illegible]
ராகுகாலம் : [illegible]

## வடக்கு-கிழக்கை மீண்டும் இணைப்பதற்கு ஹெல உறுமய ஒருபோதும் அனுமதிக்காது!

### கன்னிப்பேச்சில் அமைச்சர் ரணவக்க

கொழும்பு, பெப். 11

பிரிக்கப்பட்ட வடக்கு - கிழக்கை மீண்டும் இணைக்க ஹெல உறுமய ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லையென அக்கட்சியின் உறுப்பினர் அமைச்சர் சம்பிக்க ரணவக்க நாடாளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

அவசர காலச்சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீது கடந்த புதனன்று தனது கன்னி உரையை நிகழ்த்தினார் அமைச்சர் ரணவக்க. அப்போது அவர் மேலும் கூறியதாவது:-

புலிகளையும் அவர்களது ஆதரவாளர்களையும் இராணுவ வெற்றிகள் மூலம் நிர்வாணமாக்கிய படையினருக்கு நேரில் எனது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவசரகாலச்சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலமே படையினருக்கு சக்தியை வழங்கமுடியும். மாவிலாறு அணைக்கட்டை மனிதாபிமானமற்றமுறையில் மூடியபோது அதனை மீண்டும் திறந்த பெருமை படையினரையே சாரும்.

புலிகளின் முதுகெலும்பு எமது படையினரின் கணிசமான நடவடிக்கை காரணமாக அடித்து உடைக்கப்பட்டுள்ளது. தமிழ் பிரிவினைவாதத்துடன் மீண்டும் பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டுமென இன்று சிலர் கூக்குரலிட ஆரம்பித்துள்ளனர். வெளிநாட்டுச் சக்திகள் பலாத்காரமாக இனப்பிரச்சினைத்தீர்வுக்கு எத்தகைய தீர்வுகளையும் திணிப்பதற்கு அனுமதிக்கக்கூடாது.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் செயற்பாடுகள் காரணமாகவே

(04ஆம் பக்கம் பார்க்க)

குடாநாட்டின் குட்டிச் செய்திகள் - யாழ்ப்பாணம்

## கல்வியற் கல்லூரி நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.11

வெளிமாவட்டங்களில் உள்ள தேசிய கல்வியற் கல்லூரிகளுக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் யாழ்.தேசிய கல்வியற் கல்லூரிக்குச் சமுகமளிக்க முடியும் என்று பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்தார்.

யாழ்.தேசியக் கல்வியற் கல்லூரியில் தற்சமயம் இடம்பெறும் நேர்முகப் பரீட்சைக்கு இவர்கள் சமுகமளிக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். (1)

## வாழ்வுச் சான்றிதழ் சமர்ப்பிக்க அறிவுறுத்து

நல்லூர், பெப். 11

நல்லூர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஓய்வூதியர்களிடம் அவர்களின் வாழ்வுச் சான்றிதழ்களை பிரதேச செயலகம் கோரியுள்ளது.

இதற்கென பிரதேச செயலகத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள படிவங்களை பூர்த்திசெய்து எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## லூர்த்து மாதா திருவிழா

குருநகர், பெப். 11

பருத்தித்துறை தும்பளை லூர்த்து மாதா வருடாந்த ஆலயத் திருவிழாத் திருப்பலிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை ஒப்புக் கொடுக்கப்படவுள்ளன.

முதல் திருப்பலி காலை 7 மணிக்கும் திருவிழாத் திருப்பலி முற்பகல் 11 மணிக்கும் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளன.

திருவிழாத் திருப்பலிகளில் பங்குகொள்ளவரும் பக்தர்கள் அசாதாரண நிலையைக் கருத்திற் கொண்டு, வழிபாடுகள் முடிவடைந்ததும் ஆலயத்தை விட்டு சென்றுவிட வேண்டும் என யாழ். பேராலயம் கேட்டுள்ளது. (202-51)

## கொழும்புத்துறைக்கு நாளை முதல் பஸ்சேவை

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ். கொழும்புத்துறை தனியார் பஸ்சேவை - 790 இலக்கப் பாதையில் நாளை திங்கட்கிழமை தொடக்கம் இடம்பெறும் என்று யாழ். மாவட்ட தனியார் பஸ் உரிமையளர் சங்கங்களின் செயலகம் தெரிவித்தது.

பயணிகளின் கோரிக்கையை அடுத்து இச்சேவை தினமும் காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை இடம்பெறும்.(அ-1)

## ஆசிரியர் பயிற்சி

தென்மராட்சி, பெப். 11

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர் களுக்கான 'நிக்கொட்' ஆரம்ப சேவை பயிற்சிகள் இன்று சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

## அத்தியாவசிய சேவைகள் குறித்து செயலகத்தில் இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 11

குடாநாட்டின் அத்தியாவசிய சேவைகள் தொடர்பான கூட்டம் இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ் அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் அத்தியாவசிய சேவைகளுடன் தொடர்புடைய திணைக்களங்களின் தலைவர்கள் கலந்துகொள்வர்.

அத்தியாவசிய சேவைகளை சுமுகமாக நடைமுறைப்படுத்துவது குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்படவிருப்பதாக அரச அதிபர் தெரிவித்தார்.

(அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் பகுதிகளை தம்வசமாக்கியதன் மூலம் அரசு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முறித்துவிட்டது

## லண்டன் 'த கார்டியன்' நாளிதழ்

லண்டன்,பெப்.11

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் என்று அங்கீகரிக்கப்பட்ட பகுதிகளை அரசாங்கம் தன்வசமாக்கிக் கொண்டதன் மூலம் ஒப்பந்தத்தை அரசாங்கமே முறித்துள்ளது.

-இவ்வாறு லண்டனில் இருந்து வெளிவரும் 'த கார்டியன்' ஆங்கில நாளிதழில் நேற்று வெளியான ஆய்வுக் கட்டுரை ஒன்றில் தெரிவிக் கப்பட்டிருக்கின்றது.

ஜோனார்த்தன் என்பவர் எழுதியுள்ள அந்தக் கட்டுரையின் சில பகுதிகள் வருமாறு:-

இனங்களின் பாகுபாட்டை அரசியல் மயப்படுத்தும் சிறீலங்கா அரசின் செயற்பாட்டால் அது தற்போது பயங்கரவாத நடவடிக்கைகளாக மாற்றம் பெற்றுள்ளது. எங்கேயும் இது தான் இறுதிவழியாகவும் அமைவதுண்டு. தமிழ் மக்களின் கொள்கைகளை கண்டித்துக்கொண்டு, கோரிக்கைகளை புறக்கணித்துக் கொண்டு செயற்படும் அரசியல் தலைமைகளின் செயற்பாடுகள் அரசியல் தீர்வுக்கு தடைகளை ஏற்படுத்துவதுடன் வன்முறைகளுக்கே வழிவகுக்கும்.

### சிங்களக் கடும் போக்காளர் உணரவேண்டியது

வட அயர்லாந்து, பலஸ்தீனம் போன்றவற்றை நோக்கினால் வன்முறையாளர்களை தனிமைப்படுத்துவதை விட அவர்களுடன் பேசுவது தான் முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. சிறிலங்காவின் கடும்போக்குடைய சிங்களத் தரப்புகள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் அரசும் விடுதலைப் புலிகளும் ஒரு இடைக்கால அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தியிருந்தனர். ஆனால் விடுதலைப்புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் கடந்த வருடம் சேர்த்ததுடன் (இது ஒரு நல்ல நேரமல்ல என்பதுடன் புத்திசாலித்தனமற்ற செயற்பாடாகும்) புதிய அரசை பேச்சுக்குச் செல்லுமாறும் கேட்டுள்ளது.

### மகிந்தவின் வேட்பாளர் கருணா

சிறிலங்கா அரச படைகளின் ஆட்லறி மற்றும் விமானத்தாக்குதல்களால் கிழக்கிலங்கையில் பல பத்தாயிரம் மக்கள் வீடுகளை இழந்துள்ளனர். அரசு கிழக்கில் பல பகுதிகளை கைப்பற்றியுள்ளது. தற்போது மாகாணசபை தேர்தல்களை அப்பகுதிகளில் நடத்தி ஒரு பொம்மை ஆட்சியை அமைக்க ஆசைப்படுகிறது. இதற்காக மகிந்தவின் வேட்பாளராக கருணாவே உள்ளார். இவர் மூன்று வருடங்களுக்கு முன்னர் புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர். அப்போது அவர் மிக விரைவாக சிறிலங்கா அரசினால் உள்வாங்கப்பட்டதுடன், இராணுவத்தினர் கருணா குழுவுடன் இணைந்து பணியாற்றியும் வருகின்றனர்.

ஐ.நாவின் பாதுகாப்புச் சபையின் செயற்குழுவினால் சிறிலங்கா மற்றும் நேபாளம் ஆகியவற்றில் நடைபெறும் சிறார் படைச்சேர்ப்பு தொடர்பான விடயங்கள் நியுயோர்க்கில் விவாதிக்கப்படுகின்றன.

ஐ.நா.கண்காணிப்பில் இருக்கும் பல நாடுகளின் பட்டியலில் சிறிலங்காவும் ஒன்று.சிறுவர் படைச்சேர்ப்பை நிறுத்தாது விட்டால் தடைகள் ஏற்படுத்தப்படலாம் என ஐ.நாவின் புதிய செயலாளர் நாயகமான பான் கி மூன் சிறிலங்காவை மறைமுகமாக எச்சரித்தும் இருந்தார். விடுதலைப் புலிகள் மீது அழுத்தங்களை ஏற்படுத்துவதற்காக துரதிஷ்டமாக சிறிலங்கா அரசே தான் சிறார் படைச் சேர்ப்பை ஐ.நாவில் முன்னர் முதன்மைப்படுத்தியிருந்தது.

### அரசு குற்றங்களைச் செய்யமுடியாது

இது தொடர்பாக விசாரணைகளை நடத்துவதாக அரசு கூறியுள்ள போதும் கடத்தல்கள் தொடர்கின்றன என யுனிசெப் தெரிவித்துள்ளது. கருணா குழுவினரால் மேற்கொள்ளப்படும் சிறார் கடத்தலை நிறுத்தும் வரையும் அவர்கள் வசமுள்ள சிறார்களை விடுவிக்கும் வரையிலும் ஐ.நா. இலங்கை அரசை சும்மா விடப்போவதில்லை.

விடுதலைப் புலிகளும் அதிகளவில் சிறுவர்களை படையில் சேர்த்தாலும் ஜனநாயக வழிமுறைகளால் தெரிவுசெய்யப்பட்ட அரசு இந்தக் குற்றங்களை செய்ய முடியாது.

இது தொடர்பாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் கருத்துத் தெரிவித்திருந்தார். ஆனால், மகிந்த அவரது பதவியை பறித்துவிட்டார்.

சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள மனித அவலங்கள் மிகவும் ஆபத்தானவை. கடத்தல்களும் காணாமற் போதல்களும் காவல்துறையினராலும் அவர்களுடன் இணைந்த படையினராலும் தற்போது கொழும்பில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சிறிலங்காவில் நடைபெறும் உள்நாட்டுப் போரினால் கடந்த ஆண்டு 200,000 மக்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

இதில் பல சம்பவங்கள் சூடானில் டேபர் பகுதியில் மனித அவலங்கள் நடைபெற்ற காலப்பகுதியில்தான் சிறிலங்காவிலும் நடைபெற்றுள்ளன. ஆனால், டேபரில் நடைபெற்ற சம்பவங்கள் சிறிலங்காவில் நடைபெற்றதை விட 10 மடங்குக்கு சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. சூடானிய அரசைப்போல சிறிலங்கா அரசும் தன்னிடம் உள்ள விமானப் படைப் பலத்தை கண்மூடித்தனமாக பயன்படுத்துகின்றது.

### இந்தியா முக்கிய பங்காற்ற முடியும்

வெளியுலகம் இதில் தலையிட வேண்டும். இந்தியா மிகமுக்கிய பாங்காற்ற முடியும். இந்தியாவிற்கு செல்லும் அதிகளவான இடம்பெயர்ந்த மக்களால் இந்தியா தனது முடிவை மாற்றவேண்டிய நிலைக்குத் தள்ளப்படலாம்.

மகிந்தவினால் மேற்கொள்ளப்பட்ட வடக்கு கிழக்கு பிரிப்புக்கு இந்தியா தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது. வடக்கு கிழக்கு மாகாணங்களை பிரித்தது தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டை இல்லாது செய்துள்ளதுடன், பல நிபுணர்களால் முன்வைக்கப்படும் சமஷ்டி முறை தீர்வையும் நிராகரித்துள்ளது.

மேற்கூறப்பட்ட காரணங்களால் சிறிலங்காவிற்கு ஆயுதங்களை விற்பனை செய்வதை இந்தியா நிறுத்தியுள்ளது. இது ஒரு நல்ல சமிக்ஞை - என்று எழுதப்பட்டுள்ளது. (அ)

## அமைச்சுப் பொறுப்புக் குறித்து வர்த்தமானி அறிவிப்பு

அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்ட மூவரின் பொறுப்புக்களையும் ஜனாதிபதி ஏற்பது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியாகியது.

இந்த வர்த்தமானி அறிவித்தலின்படி பிரஸ்தாப மூன்று அமைச்சுக்களின் நிர்வாகங்களும் ஜனாதிபதியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. (1-12)

## கடந்த வருடத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, இந்த வருடம் ஜனவரி மாதத்தில் மட்டும் 52பேர் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்தன என்றும் - அந்த முறைப்பாடுகளில் 37பேர் காணாமற்போயுள்ளமை தொடர்பானது என்றும் - புள்ளிவிவரங்கள் மூலம் தெரியவருகிறது. (அ-1)

## யாழ்.நிலைமையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோரும் கலந்துரையாடினர்.

ஐவர் கொண்ட ஐ.நா. உயர்மட்டத் தூதுக் குழுவினர் நேற்றுக் காலை இங்கு வந்து மாலையில் கொழும்பு திரும்பினர்.

நாவாந்துறையில் உள்ள நலன்புரி நிலையத்திற்குச் சென்ற தூதுக்குழுவினர் அங்குள்ள மக்களின் நிலைமைகளைக் கேட்டறிந்தனர். (அ-1)

## அரசைப் பலவீன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீறியமை குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளன. நாடாளுமன்றில் அவசரகால நீடிப்புத் தொடர்பான வாக்கெடுப்பில் மூவரும் கலந்துகொள்ளாமை குறித்தும் கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

கட்சியின் ஒழுங்கு விதிகள் கடைப் பிடிக்கப்படவேண்டும் எனவும் -

இதனை மீற எவருக்கும் இடமளிக்கப் படமாட்டாது எனவும்-

ஜனாதிபதி கூட்டத்தில் தெரிவித்தார். இதனை அடுத்து ஜனாதிபதியால் அமைச்சர்கள் மூவரையும் பதவி நீக்குவது தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவை மத்திய குழு அங்கீகரித்தது. (1-12)

## நால்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்ண் அடைந்துள்ளார்.

பிரஸ்தாப நபரை சிறைச்சாலையில் தடுத்து வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக் குழு அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

## எதிர்க்கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை -அமைச்சரவையில்இருந்து நீக்கப்பட்டவர்களையும் அரசில் உள்ள அதிருப்தியாளர்களையும் இணைத்து புதிய அரசியல் முன்னணி ஒன்றை அமைக்க ஐ.தே.க. பிரமுகர்கள் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளதாக இன்னொரு தகவல் ஒன்று தெரி வித்தது.

## வடக்கு-கிழக்கு....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏ- 9 வீதியை புலிகளிடம் இழக்க வேண்டியேற்பட்டது. ஜனநாயகத் துக்கு எதிராக ரணில் விக்கிரமசிங்க புலிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். அந்த ஒப்பந்தம் புலிகளால் இதுவரை ஆறாயிரம் தடவைகள் மீறப்பட்டுள்ளன.

மஹிந்த சிந்தனை பல்வேறு விடயங்களை உள்ளடக்கியுள்ளது. அதில் படைவீரர்களும் அதிகாரிகளும் படுகொலை செய்யப்படும் போது வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும்படி எங்குமே கூறப்படவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாணங்களை மீண்டும் இணைக்க ஒரு போதும் நாம் இடமளிக்கமாட்டோம். அங்கு எமது படையினர் விரைவில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவர். என்றார். (த - 2)

## விசேட பிரதிநிதியாக ராதிகா மீண்டும் நியமனம்

கொழும்பு,பெப்.11

ராதிகா குமாரசுவாமியை மீண்டும் சிறுவர் மற்றும் ஆயுத மோதல்கள் தொடர் பான விசேட பிரதிநிதியாக ஐக்கியநாடுகள் செயலாளர் பான் கி மூன் நியமித்துள்ளார்.

ஐ.நா. செயலாளர் இத்தகவலை நேற்றுமுன்தினம் அறிவித்தார்.

முன்னாள் ஐ.நா. செயலாளர் கோபி அனான் ராதிகா குமாரசுவாமியை கடந்த 2006 ஆம் ஆண்டில் சிறுவர் மற்றும் ஆயுத மோதல் தொடர்பான விசேட பிரதிநிதி யாக நியமித்திருந்தார். (12)


## மரண அறிவித்தல்

### முத்தையா ஜெகராசா

தாவடி தெற்கு, தாவடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா ஜெகராசா கடந்த 06.02.2007 இல் லண்டனில் காலமானார்.

அன்னார் அமரர்களான முத்தையா - பூர்ணம் தம்பதியரின் மகனும் சத்தியராணியின் அன்புக் கணவரும் அமரர் சண்முகராசா, யோகராசா (ஜேர்மனி), செல்வராசா(ஜேர்மனி),கதிர்காமநாதன் (இத்தாலி), அமரர்களான சிவராசா,புஸ்பராணி மற்றும் புஸ்பலீலா புஸ்பரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நடராசா, யோகராசா,விஜயகுலசூரியர், கலாமதி, சுவா, ராணி, சாந்தி, ஞானசௌந்தரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் லண்டனில் அவரின் இல்லத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 - 12.30 மணி வரை லண்டன் ரவி தேசிய மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுப் பின்னர் City of London மயானத்தில் மதியம் ஒரு மணியளவில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
தொ.பே.: 00442085549045,
00447985108041

தகவல்:
Dr.நா.சிவபாலன்
(மைத்துனர்).

## தவறிவிட்டது

அச்சுவேலிக்கும் தொண்டைமானாற்றுக்குமிடையில் இ.போ.ச பஸ்சில் கடந்த வெள்ளிக்கிழமை (09.02.2007) காலை தங்க நகைகள், கவரிங் நகைகள் மற்றும் மேக்கப் பொருள்கள் உள்ளடங்கிய 'பாக்' ஒன்று தவறியுள்ளது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

செல்வி சி.சிவகௌரி,
காட்டுப்புலம், தொண்டைமானாறு.
தொ.பே: 0776341425

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 28, உயரம் 5' 4'' ,சிவந்த நிறம், கணக்காளராகக் கனடாவில் தொழில்புரியும் பரணி நட்சத்திரம் கிரகபாவம் 28 பெண்ணிற்கு இஞ்சினியர், டாக்டர், எக்கவுண்டர், உயர் தொழில்புரிவோர் உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.

S.சிந்துஜன் - தொ.பே.இல.:- 0776184434
மே/பா. மு.சுவாமிநாதன்,
88, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### பொன்.சாம்பசிவம்

(ஆசிரியர், கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்)

மூளாயைப் பிறப்பிடமாகவும் சங்கானை ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன். சாம்பசிவம் நேற்று (10.02.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### முருகுப்பிள்ளை கணபதிப்பிள்ளை சபாரத்தினம்

(முன்னாள் மந்திகை சரஸ்வதி புடைவை மாளிகை, கிளிநொச்சி நகை அடைவு பிடிப்பாளர் ஆகிய ஸ்தாபனத்தின் உரிமையாளர்)



தன்புலோலியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை கணபதிப்பிள்ளை சபாரத்தினம் 08.02.2007 தென்புலோலியில் காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை-கணபதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பார்வதி தம்பதியரின் பாசமிகு மருமகனும் சத்தியபாமா (டுபாய்), பாலகிருஷ்ணன் (லண்டன்), பாலச்சந்திரன் (லண்டன்), பாலேந்திரன் (லண்டன்), பாலகுமாரன் (ஆஸ்திரேலியா), பாலநாராயணநேசன் (கனடா), சத்தியவாணி (கனடா), பாலகண்ணன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அபயசிங்கம் (டுபாய்), சிவசக்தி (லண்டன்), கிருஷ்ணவேணி (லண்டன்), தாமரைச்செல்வி (லண்டன்), குகேந்திராதேவி (ஆஸ்திரேலியா), மாலினி (கனடா), சிவகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும் பார்வதிப்பிள்ளையின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளை, காலஞ்சென்ற சுப்பிரமணியம், கிருஸ்ணப்பிள்ளை, செல்லம்மா, சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அர்சுதசிங்கம் (டுபாய்), அரவிந்தசிங்கம் (டுபாய்), அருணசிங்கம் (டுபாய்), அர்ஜீனசிங்கம் (டுபாய்), அர்ஷா (டுபாய்), சோபனா (லண்டன்), சரண்யா (லண்டன்), தனுஷன் (லண்டன்), தனிக்கா (லண்டன்), பாஸ்கரன் (ஆஸ்திரேலியா), சிவமுவன்(கனடா), பானுஷா(கனடா), மதுஷன்(கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தென்புலோலி. (57904)

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.02.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org